ஸ்ரீ ஹரி:

செப்டம்பர் 2016

தனி பிரதி Rs 15/-
ஆண்டு சந்தா Rs 180/-

# மதுரமுரளி

வேணு 22; கானம் 2




மஹாரண்யம் ஸ்ரீ ஸ்ரீ முரளீதர ஸ்வாமிஜி
அவர்கள் அருளாசியுடன் வெளிவரும்
தெய்வீக மாதப் பத்திரிகை

Delivered by India Post
www.indiapost.gov.in



வெண்ணை சுண்ணம் எதிர் எதிர் தூவிட...மதுரபுரி ஆஸ்ரமத்தில் நந்தோத்ஸவம், ஆகஸ்ட் 26, 2016



# மதுரமுரளி


வேணு 22; கானம் 2


NO FAME
NO SELF INTEREST
NO NAME
ONLY GOD

# பொருளடக்கம்


| | |
|---|---|
| மதுரமான மஹனீயர்-246 | 5 |
| பக்தர்களின் கேள்விகளுக்கு ஸ்ரீஸ்வாமிஜியின் பதில்கள் | 7 |
| கச்சியில் ஆனி கருட சேவை -2 | 8 |
| ராமநாத ப்ரம்மச்சாரி | 11 |
| பாலகர்களுக்கு ஒரு கதை | 14 |
| மாதம் ஒரு சம்ஸ்க்ருத வார்த்தை | 24 |
| கோபத்தை ஆட்கொள்வது | 27 |
| சைதன்ய மஹாப்ரபு | 30 |
| பாரம்பர்ய பொக்கிஷங்கள் | 32 |
| புராநவா | 34 |
| படித்ததில் பிடித்தது | 36 |


ஹரே ராம ஹரே ராம
ராம ராம ஹரே ஹரே
ஹரே க்ருஷ்ண ஹரே க்ருஷ்ண
க்ருஷ்ண க்ருஷ்ண ஹரே ஹரே



# மதுரகீதம்


## குழந்தையாக கண்ணன் இன்று

**ராகம்: ஆரபி**
**தாளம்: ஆதி**

குழந்தையாக கண்ணன் இன்று கனவில் வந்தானே
மழலை பேச்சு பேசி என்னை மயக்கி நின்றானே
விழலுக்கிறைக்கும் நீராய் வாழ்க்கையை பாழ்படுத்தாதே - என்று
குழலூதி ஊதி ஊதி என்னை மயக்கி நின்றானே
(குழந்தை)
கழலை தூக்கி தலையில் வைத்து கதியிதுவே என்றான்
சூழல் தன்னை மறந்து நானும் மயங்கிவிட்டேனே
பழம் வேண்டும் பழம் வேண்டும் என்று அழுதென்னை எழுப்பினான்
ஒன்றொன்றாய் நான் தர இதுவல்ல இதுவல்ல என்று விம்மினான்
(குழந்தை)
செய்வதறியாது நானும் திகைத்து நின்றபோது
சுகர் கடித்த பழமே நான் விரும்பும் பழம் என்றான்
சுகர் கடித்த பழத்தை அவனுமுண்டு
ப்ரேமையை ப்ரஸாதமாக தந்தருளினான்
(குழந்தை)

<u>முன் அட்டை:</u>
மதுரபுரி ஆஸ்ரமம்
<u>பின் அட்டை:</u>
மதுரபுரி ஆஸ்ரமத்தில் ப்ரஹ்மோத்ஸவத்தில்
கோவிந்த பட்டாபிஷேகம்





# மதுரமான மஹநீயர்

டாக்டர் ஆ பாக்யநாதன்

**நமது மதுரபுரி ஆஸ்ரம சாந்தீபனி குருகுல வேதபாடசாலையில் பயின்ற வித்யார்த்தி ஸ்ரீரமணகணேஷ். ஸ்ரீஸ்வாமிஜியிடம் மிகவும் பக்தியாகவும் பிரியமாகவும் இருப்பார்; குழந்தை உள்ளம் கொண்டவர்; சூது வாது இல்லாதவர். படிப்பிற்கு பின் தற்பொழுது திருவண்ணாமலையில் தங்கி உள்ளார். சில நாட்களுக்கு முன் ஸ்ரீஸ்வாமிஜி அவர்கள் திருவண்ணாமலைக்கு சென்றிருந்தார்கள். அப்பொழுது ஸ்ரீஸ்வாமிஜி அவர்களுக்கு கடுமையான கால் வலி இருந்தது. ரமணகணேஷ் அப்பொழுது, ஸ்ரீஸ்வாமிஜி அவர்களுக்கு இதமாக பாதசேவை செய்ய ஆசைப்பட்டார். ஓய்வு எடுத்து கொண்டிருந்த ஸ்ரீஸ்வாமிஜியும், 'சரி'எனவே, ரமணகணேஷ் பாதசேவை செய்து கொண்டிருந்தார். திடீரென நிறுத்தி விட்டு விருட்டென்று கையை எடுத்துவிட்டார். அவர் கைவிரல்கள் மடங்கி இருந்தன.**

அவர் பயத்தில் இருந்தது முகத்தில் நன்றாக தெரிந்தது. அவரை பார்த்தால், ஏதோ 'ஷாக்'அடித்தாற்போல் இருந்தார். தன் கைவிரல்களை நீட்டி விட்டு கொண்டும், தடவி கொண்டும் இருந்தார்.

'என்ன ஆச்சு?' என அன்புடன் ஸ்ரீஸ்வாமிஜி அவர்கள் வினவ, சில நிமிடங்கள் தாமதித்து ரமணகணேஷ் கொஞ்சம் கொஞ்சமாக பேச ஆரம்பித்தார். "ஸ்வாமிஜி, தங்கள் பாதத்தை பிடித்துவிட்டு கொண்டிருக்கையில், திடீரென என் கரம் வழியாக மின்சாரம் பாய்ந்தால் என்ன ஒரு ஷாக் அடிக்குமோ அப்படி ஒரு பலத்த ஷாக் அடித்தது; இதனால் ஏதாவது பாதிப்பு வருமா? நான் ஏதாவது தவறு செய்துவிட்டேனா?"என innocent ஆக ரமணகணேஷ் கேட்டார்.

புன்னகை அதரங்களில் தவழ ஸ்ரீஸ்வாமிஜி, "பயம் தேவையில்லை. மிக அரிதாகத்தான் இப்படி நிகழும். இது பாக்யவசத்தால் உனக்கு கிடைத்தது. இதனால் எதிர்காலத்தில் உன் வாழ்வில் மிகுந்த நன்மை விளைய உள்ளது' என்றார்.

உடன், ரமண கணேஷின் கவலை தோய்ந்த முகம் மாறி, அதில் ஒரு தெளிவும், மகிழ்ச்சியும் காணப்பட்டது.





75 & 77, KG Marina Bay, Santhome High Road, Santhome, Chennai - 600 004
Phone: 044 - 42144662, 43033313, 43033326
contact@buddiesinfotech.com www.buddiesinfotech.com

# பக்தர்களின் கேள்விகளுக்கு ஸ்ரீ ஸ்வாமிஜியின் பதில்கள்



**சிலருடைய அனைத்து தேவைகளும், ஆசைகளும் எளிதாக நிறைவேறுகின்றன. ஆனால், நானோ அவற்றைப் பெற சிரமப்படுகின்றேன். ஒவ்வொரு நாளும் சந்தோஷமாக இருக்க என்ன வழி?**


எதையும் கண்ணனிடம் இருந்து கிடைக்கும் பிரசாதம் என நினைத்துக் கொள்ளவும். உங்களுக்கு எது நல்லது என்று அவனுக்கு தெரியுமல்லவா! அவனுக்கு நன்றி செலுத்தும்விதமாக உங்கள் அன்பு மொத்தத்தையும் அவனிடமே செலுத்துங்கள். கண்ணன் அன்பே வடிவானவன். அவனிடம் மட்டும் அன்பு செலுத்தினால் உங்கள் வாழ்வின் ஒவ்வொரு நொடியும் ஆனந்தமாகவே இருக்கும்.

# கச்சியில் ஆனி கருட சேவை -2

## ஸ்ரீ ராமானுஜம்

ஜூலை 13, 14 ஆம் தேதிகளில், நமது சத்குருநாதர் கச்சியில் ஆனி கருடனை திவ்யமாய் அனுபவித்ததை, சென்ற இதழ் தொடங்கி ஸ்மரித்து வருகிறோம். கருடசேவையின்போது, நமது வரதனின் காரணமற்ற கிருபையும் நமது ஸ்வாமிஜி அவர்களின் அனுபவத்தையும் பார்த்தோம். அன்று இரவு தொடங்கி நிகழ்ந்தவைகளை இனி பார்ப்போம்.
தேவ பெருமாளை நமஸ்கரித்து, கருட சேவையின்போது, ராஜகோபுரத்தை தாண்டுவதற்கு முன், ஒரு சில கணங்கள் நமது ஸ்ரீவரதனை ஒரு பெரிய கொடை கொண்டு மறைத்தார்கள். பிறகு புறப்பாட்டை தொடர்ந்தார்கள். ஏன் இவ்வாறு செய்ய வேண்டும்? என்ற கேள்வி, நமது ஸத்குருநாதரின் அருகாமையில் இருந்தவர்களுக்கு எழ, 'ஸகல ஜானசி மம அந்தர ஸ்திதி' என்று நம் ஸத்குருநாதருக்கும் தெரியாத எண்ணம், நமது மனதில் எழ முடியுமா என்ன? அவர் ஒரு புன்முறுவலுடன், நாங்கள் கேட்காமலேயே இந்த அழகிய பாவுகமான ஸ்ரீவரதனின் லீலையை திருவாய் மலர்ந்து, அருளினார்கள்.

காஞ்சிக்கு அருகில்தான், சோளிங்கர் என்ற ஒரு நரசிம்ம பெருமாளுக்கு உகந்த திருத்தலம் இருக்கிறது. அந்த திவ்யமான தேசத்தில், தொட்டாச்சாரியர் என்ற ஒரு மஹாபக்தர் இருந்தார். அவர் எக்காரணத்தை கொண்டும், கச்சி வரதனின் கருட சேவையை வந்து அனுபவிக்காது இருக்கவே மாட்டார். பக்தி என்றாலே சிரத்தைதானே! அந்த அன்பு கலந்த சிரத்தைக்குத்தானே, இந்த ஸ்ரீவரதன் மயங்குகிறான். இந்த சிரத்தைக்கு தக்கபடிதான், ஸ்ரீவரதன் வரமளிக்கிறான் என்று 'யாத்ருஸி ஸ்ரத்தா தாத்ருஸி ஸித்திர் பவதி'என சாத்திரங்கள் பறை சாற்றுகின்றன அல்லவா! நமது சத்குருநாதரின் இந்த இனிய சொற்களை தெளிவாகக் கேட்ட அருகிலிருந்த அன்பர்கள், அருகில் ஓடி வந்து குழுமினர்.



'இந்த தொட்டாச்சாரியாருக்கு அப்படி ஒரு சிரத்தை. இவருக்கு காஞ்சி வரதனை காண எவ்வளவு ஆவலோ, அதை

காட்டிலும் பிரேமையே உருவான கச்சி வரதனுக்கும் அவரைக் காண பேராவலாம்! ஒரு கருட சேவைக்கான காலத்தில், தொட்டாச்சாரியாருக்கு செல்ல முடியாத ஒரு கஷ்ட நிலை. கனமான இதயத்துடன் அவர் வரதனையே நினைத்து நினைத்து உருகி உருகி, ‘இப்போது வரதனின் புறப்பாடு ஆரம்பிக்க முதல் வேட்டு போட்டிருப்பார்களே! இப்போது கல்மண்டபத்தை தாண்டி ஸ்ரீவரதன் வந்திருப்பானே!’ என்றெல்லாம் அந்தந்த காலத்தில் கச்சியில் நடக்கும் கருடசேவை நிகழ்ச்சியையே, ‘தனது கண்களால் காண முடியவில்லையே’ என்ற விரஹத்துடன் ஸ்மரித்து கொண்டிருந்தார்.

திருநீராட, அருகிலுள்ள தட்டான்குளம் சென்றார். அவருக்கு ‘ஆனந்த சரஸ்’ (கச்சி திருக்கோயிலின் திருக்குளம்) ஞாபகம் வர, அவரது கண்ணீர், இதுவரை கட்டுப்படுத்திய ‘அடைக்கும் தாழ் அன்பு’ மேலிட்டதால் உடைந்து, மடை திறந்த வெள்ளம் போல், ‘பொல பொல’ என்று கண்ணீர் பெருகி அந்த தட்டான் குளத்தில் கலந்து ‘தீர்த்திகுர்வந்தி தீர்த்தானி - தீர்த்தங்களையும் புனிதப்படுத்துவர் சாதுக்கள்’ என்ற கூற்றுக்கு ஏற்றவாறு, தட்டான் குளத்தை புனிதப்படுத்திய சமயம் அது’. அதை பற்றி பேசுகையில், நமது சத்குருநாதரின் குரல் தழுதழுத்தது. அருகில் இருந்த பக்தர்களின் இதயம் உருகியே விட்டது. சிலர் கண்களில், கண்ணீர் துளிகளை காண முடிந்தது. நமது ஸ்ரீஸ்வாமிஜி தொடர்ந்து சொன்னார். ‘விரஹம் தாங்காமல் ஸ்ரீதொட்டாச்சாரியார், ‘ஹே கச்சிவரதா! பேரருளாளா! பரம தயாளா! தீனவத்சலா! பக்தரக்ஷகா! உன்னை இன்று கருடசேவையில் தரிசிக்க முடியாமல் இப்படி ஒரு துரதிர்ஷ்டமா? உன் மதுரமான கருடஸேவை அழகைக் காணாமல் அழும் எனது கண்களை எப்படி சமாதானப்படுத்துவேன்? என் கண்களுக்கு உன் தரிசன பாக்கியத்தை அருளி இந்த தீனனை காப்பாற்றும்’ என்று குளத்திலிருந்தே கதற, அதை பொறுக்காத பெருந்தேவி தாயார், தேவப்பெருமாளை தரிசனம் அருளும்படி விண்ணப்பிக்க, அதே கணம் சோளிங்கரில், கச்சியில் தரிசித்த கருடசேவையின் கோலத்திலேயே அங்கு தரிசனம் தந்தருளினார். தொட்டாச்சாரியார் பெருமாளின் கருணையை நினைத்து ஆனந்த கண்ணீர் வடித்தார். இந்த ஸ்ரீகச்சிவரதனின் திவ்ய அர்ச்சாவதார லீலையை ஒட்டியே, இன்றும் ராஜகோபுரம் தாண்டும் வேளையில் நீங்கள் எல்லோரும் பார்த்தீர்களே, அரை நிமிடம் குடையால் மறைத்து, பிறகு கற்பூர ஹாரதி கண்டருளி, அதோ வருகிறார் பாருங்கள் நமது கச்சி வரதர்!’ என்று சொல்லி முடித்தார் நமது சத்குருநாதர். மதுரமான வைபவம், நமது சத்குருநாதர் மூலம் கேட்கும்போது, அதிமதுரமாக அனைவருக்கும் இனித்தது. மனதால் வரதனின் தயாள குணத்தையும் தொட்டாச்சாரியாரின் திடமான பக்தியையும் அனைவரும் ஸ்மரித்து பேரானந்தம் அடைந்தனர். (வரதர் வருவார்...)

love is eternal.....we build homes with love

rk

radha krishna real estates

**rajmani group of companies**

(property developers, builders and contractors)

we invite joint venture /outright proposals from owners

Contact 9840030711, email: rkre46@gmail.com

Website: http://www.rajmanibuilders.com

**Dr. Shriraam Mahadevan**

MD (Int Med), DM (Endocrinology)
Consultant in Endocrinology and Diabetes
Regn. No 62256

**ENDOCRINE & SPECIALITY CLINIC**

New 27/1, Old 11/1, (Gr.Floor), 4th Cross Street,
R.K.Nagar, Mandaveli, Chennai - 600 028.
(Next to Krishnamachari Yogamandiram)
Tel: 2495 0090Mob: 94458 80090
E-mail: mshriraam@gmail.com,www.chennaiendocrine.com
www.chennaiendocrine.com

# ராமநாத ப்ரம்மச்சாரி

**ஒரு முற்றுணர்ந்த ஞான குருநாதனிடம், எப்படி சரணடைந்து வாழ்ந்து இப்பிறவியிலேயே முக்திப்பேறு பெறுவது என்பதற்கு ராமநாத ப்ரம்மச்சாரி போன்ற பக்தர்கள் இலக்கணமாய் இருந்து நமக்கு வழிகாட்டுகிறார்கள்!**


முதலியார் பாட்டி மற்றும் ராமநாத ப்ரம்மச்சாரி இருவரை நினைத்தால் மட்டும்தான், எனக்கு பயம் வருகிறது ('அவர்கள் பொறுப்பு என்னுடையதாகிறது') என்பார் பகவான் ரமணர். காரணம், இவ்விருவரும் பகவானிடம் பூரண அர்ப்பணிப்புடனும் தூய அன்புடனும் சேவை செய்தவர்கள். அவர்கள் ஒன்றை கேட்டால், பகவானால் அதை மறுக்க இயலாது என்பதை அவரே அறிவார்.

டவுனில் இருந்த வேதபாடசாலையில் படித்து வந்தார் ராமநாத ப்ரம்மச்சாரி. ரமண பகவானை முதன்முறையாக பார்த்தபொழுதே, அவர்தம் மனம் ஒடுங்கி, இருதயம் தொட்டு, ஆவி, உடல் முழுவதையும் பகவானுக்கே அர்ப்பணித்து விட்டார். அதன்பின் பெரும்பாலும், பகவானின் சன்னதியில் மௌனமாகவே வாசம் செய்வதையே தம் இலட்சியமாக கொண்டார். வேதபாடசாலையில் இலவசமாக உணவும் தங்க இருப்பிடமும் தரப்பட்டாலும், பகவானுடன் இருப்பதையே ராமநாதன் விரும்பினார். வெளியில் பிக்ஷை எடுத்து, அப்பொழுது விருபாக்ஷி குகையில் தங்கி இருந்த ரமண பகவானுக்கு அளிப்பார். பகவான் எதை தந்தாரோ, அதையே களிப்புடன் உண்பார்.

இந்த அரிய அந்தண சாதுவின் சரணாகதி என்பது அப்படிப்பட்ட அழகுடையதாக இருந்தது. பகவானின் தாயார் அந்த காலத்து ஆசார, அனுஷ்டானங்களை கடைப்பிடித்து வந்தவர். ராமநாதனை தனக்கு தேவையான ஒத்தாசைகளை செய்ய அனுமதிப்பார். எந்த சிறு தேவையாக இருந்தாலும் அடிக்கொரு தடவை, 'ராமநாதா ராமநாதா' என்று அவர் பெயர் சொல்லி அழைப்பது வழக்கம். ரமண பகவானுமே கூட, அதை வேடிக்கையாக, 'அம்மாவின் நாம ஜபம் தொடங்கி விட்டது' என்பார்.

ஒருமுறை ராமநாத ப்ரம்மச்சாரியிடம் பகவான், 'ராமநாதா! நீ ஆன்மாவை உணர்ந்து விட்டாய்' என்றார். அதை ராமநாதனால் நம்ப முடியவில்லை. அதனால் பகவானிடம் அது குறித்து, தம் சந்தேகத்தை எழுப்பி கேட்டு கொண்டே இருந்தார். பகவானும் பன்முறை அவரிடம், 'நீ உன்னை உணர்ந்தவன் ஆனாய்' என்று சொல்லிக் கொண்டே இருந்தார். இறுதியில் ஒருமுறை தம் ஆசனத்தில் இருந்து எழுந்து ராமநாதனின் தலையில் செல்லமாய் தம் அம்ருத கரங்களால் (knuckles) குட்டி, மீண்டும், 'நீ உன்னை உணர்ந்தவன்' என்றார். உடனே ராமநாதன் பரவசமுற்றார். ஹாலில் இருந்து வெளியே ஓடி எல்லோரையும் பார்த்து, தான் ஞானமுற்றேன் என பகவான் சொன்னாரென சொல்லவில்லை! மாறாக இவ்விடத்தில் பகவான் என்னை செல்லமாக குட்டினார் என சொல்லி சொல்லி பரவசமடைந்தார். பகவான் ஸ்பரிசம் என்பது ஞானத்தை விட பெரிதாக இருந்தது அந்த எளிய தூய சாது மனம் படைத்தவருக்கு!

மேலும் பலாக்கொத்தில் தங்கி இருந்தபொழுது காவ்யகண்டர், முருகனார், கோஹன், பால் பிரண்டன், விஸ்வநாத ஸ்வாமி, குஞ்சு ஸ்வாமி என பல பக்தர்களுக்கு சேவை செய்து வந்தார். ஆஸ்ரமத்தில் பெரும்பாலான நேரத்தை பகவானுடன் கழித்திருக்க வேண்டும் என்பதே அவர்களின் லட்சியம். ஒவ்வொரு மாலையும், ராமநாத ப்ரம்மச்சாரி பலாக்கொத்தில் அனைத்து பக்தர்களின் இருப்பிடத்தையும் கூட்டி, சுத்தம் செய்து வைப்பார். அவர்களின் தீப விளக்கை சுத்தம் செய்து பக்தியுடன் அவர்களுக்கு தேவையானதை செய்வார். மதிய வேளைகளில் அவர்களுக்கு தேவையானதை டவுனுக்கு சென்று சேகரித்து வருவார். இப்படி சேவை செய்தாலும், பகவான் இருக்கும் நேரத்தில், ஹாலில் அவர் முன்னே மறக்காமல் வந்தமர்ந்து விடுவார்.



*'பகவான் ரமணரை சுற்றி சுற்றியே தம் வாழ்க்கையை ராமநாதன் அமைத்து கொண்டார்.'*



அப்பொழுது பலாக்கொத்தில் இருந்தோர், ராமநாதரின் பொன்னான சேவைகளை பகவானுக்கு எடுத்து சொல்லவில்லை. அதற்கோர் சமயம் வந்தது. ஒருமுறை விஸ்வநாத ஸ்வாமிக்கு ஒரு போஸ்ட் வந்தது. அதில் பின்குறிப்பாக 'பலாக்கொத்து சர்வாதிகாரிக்கு என் நமஸ்காரங்களை தெரிவிக்கவும்' என குறிப்பிடப்பட்டு இருந்தது. பகவான் அவ்வப்பொழுது, பக்தர்களுக்கு வரும் கடிதங்களை அவர்களிடம் தம் கரங்களாலேயே கொடுப்பது வழக்கம். அப்பொழுது புன்னகை தவழ, பலாக்கொத்து சர்வாதிகாரி யார்? என விஸ்வநாத ஸ்வாமியிடம் வினவினார். மூலையில் அமர்ந்திருந்த ராமநாத ப்ரம்மச்சாரி அதை கேட்டு, பவ்யமுடன் முன்னே வந்து, 'பகவான், நான் அவர்களுக்கு சேவை செய்வதால் என்னை அப்படி அழைக்கிறார்கள். அவர்களுக்கு சேவை செய்ய அனுமதி வழங்கி, அதற்கு அங்கீகாரமாய் என்னை சர்வாதிகாரி என அழைக்கின்றனர்' என்றார். பகவானோ அதை கேட்டு பெரிதும் சந்தோஷமுற்று, 'ஆஹா! சர்வாதிகாரி (ஆளுபவர்) என்பவர் இப்படி அல்லவா இருக்கவேண்டும்' என தம் அங்கீகாரத்தையும் தெரிவித்தார். (தொடரும்...)

## நன்றி: ரமண பெரிய புராணம் - ஸ்ரீகணேசன்


### மதுரமுரளி ஆண்டு சந்தா Rs 180

**D.D/M.O/Cheque in the name of Guruji Sri Muralidhara Swamigal Mission**

சந்தா அனுப்ப முகவரி:
Guruji Sri Muralidhara Swamigal Mission, Plot No.11, Door No. 4/11, Netaji Nagar Main Road, Jafferkhanpet, Chennai - 83. Ph: 24895875

- மூன்று வருடம் வரை மட்டுமே சந்தா பெற்றுக்கொள்ளப்படுகிறது.
- சந்தாதாரர்கள் தங்களது சந்தாவை புதுப்பிக்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.
- மதுரமுரளி விவரங்களுக்கு helpdesk@madhuramurali.org என்ற மின்னஞ்சலை தொடர்பு கொள்ளவும்.

# பாலகர்களுக்கு ஒரு கதை

## ஒரு விநோத பிச்சை



கந்தல் மட்டுமே உடுத்திய ஒரு பிச்சைக்காரன், பல ஆன்மீக அன்பர்கள் மொய்க்கும் மோக்ஷபுரி என்ற புனித தலத்தில் வலம் வந்து கொண்டிருந்தான். மற்ற பிச்சைகாரர்களை போல் இல்லாமல், இவன், தனது கையில் ரூபாய் இருபது வைத்துகொண்டு, அன்ன தானம் செய்யும் சத்திரம் ஒவ்வொன்றாக ஏறி இறங்கினான்!

பிச்சை எடுப்பதற்காக அல்ல! தன்னிடம் உள்ள இருபது ரூபாயை, அன்ன தானத்திற்கு நன்கொடையாக அளிக்க!!

ஒவ்வொரு மடமும் அன்று விழா கோலம் பூண்டு இருந்தது. பல கொடையாளிகள் அன்னதானத்திற்காக நன்கொடை கொடுக்க வரும் நாளன்றோ, அன்று!. இந்த பிச்சைக்காரனை யாரும் மதிக்கவில்லை!!. மாறாக தனது கோபத்தை காட்டினர்; ஏளனம் செய்தனர். "பெரிய பணக்காரனாடா நீ? இருபது ரூபாய்க்கு என்ன வரும்? வேண்டும் என்றால் ஒரு வேளை சாப்பிட்டு போ! தானம் கொடுக்கும் முகத்தை பார்!!" இவ்வாறு பல வசனங்கள்!!

இந்த பிச்சைக்காரன் போக்கு விநோதமாக இருந்தது. ஒவ்வொரு அன்னதான சத்திரத்தில், இப்படி வசவு வாங்கியும் அவன் சளைக்கவுமில்லை, "சரிதான் போ!" என்று முயற்சியை கைவிடவுமில்லை. இறுதியாக ஒரு மகான் நடத்தும் சத்திரம் சென்றான். அங்கு புன்முறுவலுடனும் இன்சொற்களுடனும் முன்னின்று, அந்த மேலாளர் பிச்சைக்காரனை சாப்பிட அழைத்தார்.

பிச்சைக்காரனும் சந்தோஷித்து தனது இருபது ரூபாயை நீட்டவே, அதை அன்புடன் பெற்றுக் கொண்டு, "நீங்கள் கஷ்டப்படும் தருவாயிலும் இருபது ரூபாய் கொடுக்க முன் வந்திருக்கிறீர்களே, மிக்க நன்றி!!" என்று சொல்லி, அருகில் இருந்த பணியாளை அழைத்து,

"உடனே போய் இருபது ரூபாய்க்கு கடுகு வாங்கி வா! அதை வைத்தே நமது கலந்த சாத பிரசாதத்திற்கு எண்ணையில் தாளித்து கொட்டலாம்! இவரே முதலில் சாத விநியோகத்தை தொடக்கி வைக்கட்டும்!" என்றார்.

அந்த பிச்சைகாரருக்கு ஆனந்தம் கரை புரண்டு ஓடிற்று. "இருபது ரூபாயால் என்ன ஆகும் என்று எண்ணாமல், பணத்தின் அருமை தெரிந்து இருக்கிறது, அதை விட பணத்தை கொடுக்கும் மனிதரை மதிக்க தெரிந்து இருக்கிறது; தோற்றத்தை வைத்து எடை போடாத பக்குவமும் பரிமளிக்கிறது!" என்றெல்லாம் எண்ணி, சந்தோஷப்பட்டார் அந்த பிச்சைக்காரர்.

சந்தோஷமாக பரிமாறினார். செல்லும் முன் ஒரு பேனா கேட்டார். ஒரு அழுக்கான கவரில், "தனது நன்றியை தெரிவிக்கும் வண்ணம் சில வரிகள்" என்று சொல்லி கொடுத்து அந்த இடத்திலிருந்து விலகினார். அன்றாட அன்னதானத்தை அன்றன்று வரும் நன்கொடையில், அக மலர்ச்சியுடன் நடத்தும் அந்த மேலாளர், இரவு கவரில் என்னத்தான் எழுதினார் என்று பார்க்க ..

அதில் ஒரு கடிதம்..

"இங்குள்ள அன்ன சத்திரத்திற்கு நன்கொடை கொடுக்கத்தான் வந்தேன்- உங்கள் இடத்தில் மட்டுமே உண்மையான அன்ன தானம் நடக்கிறது. ஆகவே அடியேனின் அன்பு காணிக்கையை தவறாது பெற்றுக் கொள்ளுங்கள்-

இப்படிக்கு
திரு. பிச்சை
பிச்சை Enterprises முதலாளி"

அதில் ருபாய் ஐந்து கோடிக்கான ஒரு காசோலை!!. சிறிய நன்கொடை என்று அலட்சியப்படுத்தாத அந்த அன்ன தான மேலாளரின் பண்பை கொண்டாடுவதா? பெரிய கணிசமான நன்கொடையை மறைமுகமாக எந்த டம்பமும் இல்லாமல் கொடுத்த திரு. பிச்சையின் நற்பண்பை கொண்டாடுவதா? இது அல்லவோ நற்பண்புகளின் வினோதமான ஒரு போட்டி!

(சென்ற நூற்றாண்டில் இந்தியாவில் நடைபெற்ற ஒரு உண்மை நிகழ்ச்சியிலிருந்து)

**Our Humble Pranams to the Lotus feet of His Holiness Sri Sri Muralidhara Swamiji**



**Gururam Consulting Private Ltd**



ஸ்ரீ ஸ்வாமிஜியின் முன்னிலையில் மதுரை கோப குடீரம் குழு




ஸ்ரீ வல்லபதாஸ் அவர்களின் குடியாத்தம் சத்சங்கங்கள்





சாந்தீபனி குருகுலம் வேதபாடசாலையில் சுதந்திர தின விழா, மதுரபுரி ஆஸ்ரமம்



நகர சங்கீர்த்தனம், குடியாத்தம்




Samskruti - Inter School Heritage Fest, July 31, 2016, Chennai




















**Puranava -**
**Inter School Indian Heritage Quiz**
**August 6th, 2016, Chennai**



சேங்கனூரில் ஸ்ரீ ஸ்ரீ அண்ணா அவர்களின் 83வது ஜயந்தி மஹோத்ஸவம், ஸ்ரீ ப்ரேமிக ஜன்மஸ்தான்



சேங்கனூரில் புதிய ATM திறப்பு

# சத்சங்க செய்திகள்

## 2 ஆகஸ்ட்

அக்ஸர் பெயிண்ட்ஸ் குரூப் நிறுவனத்தின் ஸ்ரீராஜமாணிக்கம் நாடார் அவருடைய குடும்பம் யோகிராம்சுரத்குமார், ஸ்ரீஸ்வாமிஜி அவர்களிடம் மிகுந்த பக்தி கொண்டது. ஸ்ரீஸ்வாமிஜி அவர்களின் வழிகாட்டுதல்படி அவர்கள், கோவிந்தபுரத்தில் யோகிராம்சுரத்குமார் நாமாஸ்ரமம் ஒன்று கட்டியுள்ளார்கள். ராஜமாணிக்கம் நாடார் அவர்களின் பிறந்த தினமான ஆகஸ்ட் 2 அன்று நாமாஸ்ரமத்தின் இரண்டாம் வருட பிரதிஷ்டா தினம் ஸ்ரீஸ்வாமிஜி அவர்கள் முன்னிலையில், மிக விமரிசையாக கொண்டாடப்பட்டது.

## 4,5 ஆகஸ்ட்

ஆடி பூரத்தை முன்னிட்டு ஆகஸ்ட் 4ம் தேதி திருநாங்கூரிலும், 5ம் தேதி சென்னை ப்ரேமிகபவனத்திலும் ஆண்டாள் கல்யாணம் ஸ்ரீ ஸ்வாமிஜி முன்னிலையில் நடைபெற்றது

## 18 - 26 ஆகஸ்ட்

சேங்கனூரில் ஸ்ரீ ஸ்ரீ அண்ணா அவர்களின் 83-வது ஜயந்தி மஹோத்ஸவம் சேங்கனூர் க்ஷேத்ர உபாஸனா ஸமிதியினால் மிகவும் விமரிசையாக கொண்டாடப்பட்டது. ஆகஸ்டு 25, ஸ்ரீ ஸ்ரீ அண்ணா அவர்களின் ஜயந்தி தினத்தன்று ஸ்ரீ ஸ்ரீ அண்ணா அவர்களுக்கு அபிஷேகமும், பாதபூஜையும், பாதுகை புறப்பாடும் மிகவும் கோலாஹலமாக நடைபெற்றது. ஏழு நாட்களும் ஸ்ரீ ஸ்ரீ அண்ணா அவர்களின் க்ரந்தங்களிலிருந்து பக்தர்களின் உபந்யாஸம் நடைபெற்றது. தினமும் இரவு பல்வேறு பாகவதோத்தமர்களால் திவ்யநாம ஸங்கீர்த்தனம் ப்ரேமிகஜன்மஸ்தானில் நடைபெற்றது. ஆகஸ்டு 25, சேங்கனூர் ஸ்ரீ ஸ்ரீநிவாஸ பெருமாள், புதியதாக நிர்மாணிக்கப்பட்ட தங்கரதத்தில் எழுந்தருளினார். பக்தர்கள் அனைவரும், இந்த மஹோத்ஸவத்தில் கலந்துகொண்டு ஸ்ரீ ஸ்ரீ அண்ணா அவர்களின் க்ருபைக்கு பாத்திரர்களானார்கள்.

## 15 ஆகஸ்ட்

சுதந்திர தினத்தன்று பிரதி வருடம் போல இவ்வருடமும் **GOD INDIA TRUST** மற்றும் தூத்துக்குடி ஸ்ரீசக்தி ஸ்ரீனிவாசன் அறக்கட்டளையும் இணைந்து மாணாக்கர்களுக்கு சீருடை, சான்றிதழ் மற்றும் பரிசு வழங்கின. **GOD INDIA** சார்பாக மஹாரண்யம் சாந்தீபனி குருகுலம் பிரின்சிபால் ப்ரும்மஸ்ரீ பாலாஜியும், மஹாரண்யம் மதுரபுரி ஆஸ்ரமம்

சார்பாக ஸ்ரீ ஸ்ரீதர் அவர்களும் சக்தி ஸ்ரீனிவாசன் அறக்கட்டளை சார்பாக திரு.கண்ணனும் கலந்துகொண்டு பரிசுகள் வழங்கினர். மஹாரண்யம் கிராம அரசு உயர்நிலைப்பள்ளியில் பத்தாம் வகுப்பில் முதல் மூன்று மதிப்பெண்கள் பெற்ற மாணக்கர்களுக்கு கோப்பை, சான்றிதழ் மற்றும் ரொக்க பரிசும், பத்தாம் வகுப்பில் 100சதவிகிதம் தேர்ச்சி பெற ஊக்குவித்தமைக்காக ஆசிரியர்களுக்கும் தலைமை ஆசிரியருக்கும் ரொக்க பரிசும், சான்றிதழும் வழங்கப்பட்டது. மேலும் மஹாரண்யம் கிராம அரசு ஆரம்ப பள்ளியில் 4, 5ஆம் வகுப்பு மாணவர்களுக்கு லிப்கோ ஆங்கிலம்-தமிழ் டிக்ஷனரியும், புதிதாக சேர்ந்த 1ஆம் வகுப்பு மாணாக்கருக்கு சீருடையும் வழங்கப்பட்டது. அன்று வெள்ளரை கிராம அரசு ஆரம்ப பள்ளியில் 5ஆம் வகுப்பு வரை பயிலும் மாணாக்கர்களுக்கு சீருடையும் வழங்கப்பட்டது.

## 30 ஜூலை - 6 ஆகஸ்ட்

குடியாத்தத்தில் திருவள்ளுவர் பள்ளியில் முரளிஜி ஸ்ரீமத் பாகவத பிரவசனம் செய்தார். பூர்த்தி தினத்தன்று நகரகீர்த்தனமும் திருக்கல்யாணமும் இடம் பெற்ற இவ்வைபவத்தில் சுமார் 1500 அன்பர்கள் கலந்துகொண்டனர். மேலும் ஆகஸ்ட் 19-23 தேதிகளில் அவர் கடலூர் மாவட்டத்தில் 7 பள்ளிகளில், 1250 மாணவர் முன் மஹாமந்திர கூட்டு பிரார்த்தனை நடத்தினார்.

## ஜூலை 31

சென்னை ஸ்ரீ ராமகிருஷ்ணா பள்ளி இன்போசிஸ் அரங்கத்தில் 'ஸம்ஸ்க்ருதி' - ஓவியம் மற்றும் பேச்சுப் போட்டி நடைபெற்றது. 'A TRIBUTE TO ARTHASHASTRA' கௌடில்யரின் அர்த்தசாஸ்திரத்தை மையமாக வைத்து நடைபெற்ற பல போட்டிகளில் 750 பள்ளி சிறுவர்கள் பங்கேற்றனர். 'An idea for modern India from Arthashastra' என்ற பேச்சு போட்டியில் சிறுவர்கள் மிகவும் திறமையாகவும் உரையாற்றினர்.

## 6 ஆகஸ்ட்

சென்னை மயிலாப்பூர் பாரதி வித்யா பவனில் இவ்வருடம் நடைபெற்ற "புராநவா - Inter Schoool Heritage Quiz" நடைபெற்றது. 114 குழுக்கள் பங்கேற்ற இதில் வித்யா மந்திர் சீனியர் மற்றும் மாடர்ன் சீனியர் பள்ளிகள் முறையே 1, 2ஆம் இடத்தை பெற்றன . ஸ்ரீராமானுஜம் மிகவும் சுவாரஸ்யமாக நடத்திய பரபரப்பான இப்போட்டியில் பிரபல வரலாற்று ஆராய்ச்சியாளர் டாக்டர்.சித்ராமாதவன் சிறப்பு விருந்தினராக பங்கேற்றார்.

# மாதம் ஒரு சம்ஸ்க்ருத வார்த்தை

ஸ்ரீ விஷ்ணுப்ரியா

# அனுகம்பா

சம்ஸ்க்ருதத்தில் பல அழகிய, ஆழமான அர்த்தமுடைய சொற்கள் உள்ளன. அவற்றில் சில சொற்களுக்கு மொழி பெயர்ப்பு செய்தாலும் கூட, அதன் முழுமையான அர்த்தத்தை வெளிப்படுத்த இயலுமா என்று சொல்லமுடியாது. அந்த சொற்கள், எப்படி உபயோகப்படுத்தப்பட்டுள்ளன என்று பல உதாரணங்களை பார்க்கும்பொழுது, அதன் முழுமையான பொருள் நமக்கு நன்கு விளங்கும்.

ஆகையால் இதில் நாம் அப்படிப்பட்ட சில அரிதான, அருமையான, அழகிய சம்ஸ்க்ருத சொற்களை எடுத்து, அவைகளின் பொருளை அறிந்துகொண்டு, அவை எவ்விதம் ஸ்ரீமத் பாகவதத்திலோ, ஸ்ரீமத் ராமாயணத்திலோ ப்ரயோகம் செய்யப்பட்டுள்ளன என்பதை பார்ப்போம்.

இந்த முறை, நாம் அர்த்தம் பார்க்கப் போகும் சொல் - "அனுகம்பா" என்பதாகும். "அனுகம்பா" என்ற சொல்லிற்கு பொருள் என்னவென்றால் - கருணை, இரக்கம், அன்புடன் கூடிய ஆதரவு இவையாகும். 'அமரகோஷம்' எனும் சமஸ்க்ருத அகராதியில் *"க்ருபா தயா அனுகம்பா ஸ்யாத் அனுகோஷ:"* என்பது இச்சொல்லின் விளக்கம்.

இந்த 'அனுகம்பா' என்ற சொல் ஸ்ரீமத் பாகவதத்தில் பல இடங்களில் (43 இடங்களில்) வருகின்றது. பகவானுடைய எல்லையற்ற, காரணமில்லாத, அன்பையும் கருணையையும் பற்றி கூறும் சந்தர்ப்பத்தில், இந்த பதம் வருவதை பார்க்கலாம். அவற்றினுள் மிகவும் ரஸமாகவும் உருக்கமாகவும் இருக்கும் சில இடங்களை இந்த முறை பார்ப்போம்.

பல பக்தர்கள் பாகவதத்தில் பகவானுடைய அளவு கடந்த கருணையை எண்ணி உருகும் பொழுது, 'அனுகம்பா' என்ற பதத்தை தான் கூறுகிறார்கள். முதலில் பீஷ்மர் அம்பு படுக்கையில் படுத்துக் கொண்டிருக்கும்பொழுது, கண்ணன் அவரை பார்க்க வருகிறான். அவர், தன் மனதில் கண்ணன் வரவை எதிர்பார்த்துக் கொண்டிருப்பதை வெளிப்படுத்தாத போதிலும், தன் மீது உள்ள கருணையால், அதை கண்ணனே அறிந்து வந்து, அந்திம தரிசனம் தந்த அழகை கூறுகிறார் - "*ததாப் யேகாந்த பக்தேஷு பஷ்ய பூப அனுகம்பிதம்*" -"ஹே யுதிஷ்டிர! எங்கும் நிறைந்து, எல்லோரிடமும் சம நோக்கு கொண்ட போதிலும், ஏகாந்த பக்தி கொண்டவர்களிடம் அவனது "கருணையை" பார்த்தாயா? உயிர் பிரியும் தருணத்தில் க்ருஷ்ணனே எனக்கு ஸாக்ஷாத்தாக தரிசனம் கொடுக்க வந்துள்ளான்!" என்று பெருமிதத்துடன் கூறுகிறார்.

ப்ரஹ்லாதன், தன்னை காப்பாற்ற தூணிலிருந்து ஆவிர்பவித்த நரஸிம்ஹ பகவானை ஸ்துதி செய்யும் பொழுது

*"க்வாஹம் ரஜ: ப்ரபவ ஈஷ தமோதிகேஸ்மின்।*
*ஜாத: ஸுரேதரகுலே க்வ தவானுகம்பா॥"*

"தமோ குணம் அதிகமாக உள்ளதும், ராஜஸமானதுமான அஸுரகுலத்தில் பிறந்த நான் எங்கே? நீ என் மீது பொழியும் கருணை (அனுகம்பா) எங்கே?" என்று மிகவும் வினயத்துடன் பகவத் க்ருபையை ஸ்மரிக்கிறான்.

நாரதர் வழியில் த்ருவனை பார்த்து, "எங்கு செல்கிறாய்?" என்று கேட்க, அவன் மாற்றாந்தாயின் கடுஞ்சொல்லால் துன்பப்பட்டு, பகவானை தேடி காட்டிற்கு செல்கிறேன் என்று கம்பீரமாக சொன்னதும், அவனது வைராக்கியத்தை மெச்சி அவனுக்கு உபதேசம் செய்கிறார். நாரதர் பரம கருணையினால் த்ருவனுக்கு உபதேசித்தார் என்று கூறும் பாகவதம் 'அனுகம்பா' என்றுதான் அதை குறிப்பிடுகிறது.

"*ப்ரீத: ப்ரத்யாஹ தம் பாலம் சதவாக்கியம் அனுகம்பயா*" - பரம க்ருபையால் (அனுகம்பய), சந்தோஷமடைந்தவராய் அந்த குழந்தை த்ருவனுக்கு ஸன்மார்கத்தை உபதேசித்தார்' என்று பொருள்.

தசம ஸ்கந்தத்தில் க்ருஷ்ணாவதார கட்டத்தில் தேவகியின் கர்ப்பத்தில் உள்ள பகவானை ஸ்துதி செய்யும் பொழுது, தேவர்கள் - "*த்ரக்ஷ்யாம காம் த்யாம் ச தவானுகம்பிதாம்*" "கூடிய சீக்கிரத்தில் உனது அழகிய திருவடிகளால் அலங்கரிக்கப்பட்டு பூமிதேவி பாரம் நீங்கப் பெறுவாள். அப்பொழுது பூலோகமும் ஸ்வர்கலோகமும் தங்கள் 'க்ருபையை' பெற்றதாக ஆகும்! அது மஹாபாக்கியமே! என்று அழகாக கூறுகின்றார்கள்.

ப்ரம்ம ஸ்துதியில் கர்வம் எல்லாம் அழிந்தவரான ப்ரம்மா குழந்தை கோபாலனை பார்த்து -

*"தத்தே அனுகம்பாம் ஸுசமீக்ஷமாநோ*
*புஞ்சான ஏவாத்மக்ருதம் விபாகம்*
*த்ரித்வாக் புர் பீர் விததன்னமஸ்தே ஜீவேத யோ*
*முக்திபதே ச தாய பாக்"*

எவனொருவன் தான் செய்த கர்மபலனை பற்றில்லாமல் அனுபவித்து கொண்டே, மனம், வாக்கு, சரீரங்களால் உங்களை வணங்கி கொண்டு, தங்களது காரணமற்ற க்ருபையை (அனுகம்பாம்) எதிர்பார்க்கிறவனாய் ஜீவிக்கிறானோ, அவன் மோக்ஷ பதவியில் பங்குள்ளவன் ஆகிறான், என்று எடுத்துரைக்கிறார்.

ருக்மிணிதேவியும்ஸ்ரீ க்ருஷ்ணனிடம் - *"மாமீக்ஷஸே ததுஹ ந: பரமாணுகம்பா"* ஆத்மாராமனாக இருந்தபோதிலும், லோகத்தின் பொருட்டு என்னை கடாக்ஷம் செய்கிறீர்களே, அதுவே எனக்கு தங்களுடைய மேலான ஆதரவு (பரமாணுகம்பா) என்று பகவானுடைய க்ருபையை எண்ணுகிறாள்.

கடைசியாக அர்ஜுனனும் பிராம்மண குமாரர்களை மீட்டு கொடுப்பேன் என்று சபதம் செய்து, தன்னால் எந்த லோகத்திற்கும் சென்றும் அது முடியவில்லை என்றதும், க்ருஷ்ணனே அக்குழந்தைகளை வைகுண்ட லோகத்திலிருந்து மீட்டு கொடுத்தானல்லவா? அப்பொழுது, தனது வீர்யத்தை நம்பி வாக்களித்த அர்ஜுனன், பகவத் க்ருபையில்லாமல் எதுவுமே ஸாத்யமில்லை என்று உணர்ந்தான்.

*"யத்கிஞ்சித் பௌருஷம் பும்ஸாம் மேனே க்ரிஷ்ணானுகம்பிதம்"* - "மிகச் சிறியதாகிலும், மனிதர்களின் பராக்ரமமானது ஸ்ரீகிருஷ்ணனின் அருளால்தான் (க்ருஷ்ணானுகம்பிதம்) ஏற்படுகிறது என்று எண்ணினான் அர்ஜுனன்" என்று பொருள்.

இவ்வாறு 'அனுகம்பா' என்ற சொல் பகவானின் க்ருபையை எடுத்துரைக்க எத்தகைய ஒரு அழகிய சொல்லாக பாகவதத்தில் உபயோக படுத்தப்பட்டுள்ளது என்று அனுபவித்தோம்.

## ஸ்ரீ ஸ்ரீ ஸ்வாமிஜியின் பொன்மொழிகள்

ஒரு இனிப்பு பண்டத்தை சாப்பிட்ட பிறகு காபி குடித்தால், சர்க்கரை இருந்தும் காபி கசக்கும். அதுபோல், பகவத் தரிசனம் சித்தித்து, அந்த ஆனந்தத்தை உணர்ந்த ஒருவருக்கு, உலக வாழ்க்கை கசந்துவிடும். ஒருவர் பகவத் தரிசனம் ஆன பின்பும், உலக வாழ்க்கையில் உழன்றுக்கொண்டு இருக்கிறார் என்றால், அவர் சொல்வது பொய்யே ஆகும்.

- மஹாரண்யம் ஸ்ரீ ஸ்ரீ முரளீதர ஸ்வாமிஜி

# கோபத்தை ஆட்கொள்வது

கோபம் நம்மை ஆட்கொள்ளும் முன், நாம் அதை ஆட்கொள்ளவேண்டும். கோபம் மிகவும் சாதாரணமான ஒரு மனித உணர்வு. ஆயினும், அது கட்டுப்பாட்டை மீறி அழிக்கக்கூடியதாக ஆகிவிட்டால், அது பிரச்சனைகளுக்கு வழி வகுக்கும்; வேலையில், தனிப்பட்ட உறவுமுறைகளில், மேலும் வாழ்க்கையில் ஒட்டுமொத்தமாக நாம் சக்திவாய்ந்த எனினும் கணிக்க இயலாத இந்த ஒரு உணர்வின் தயவில் இருந்தால் பிரச்சனைகளையே சந்திப்போம். விவேகத்துடனும் நிதானத்துடனும் நிலைமையை கையாளுவதால், கோபத்தை கட்டுப்படுத்த முடியும். எந்நேரமும் ஊக்கந்தளராமல் புத்திசாலித்தனமாக நடந்து கொள்ள வேண்டும். நாம் மற்றவர்களால் தாக்கப்படும்பொழுது அனுபவிக்கும் வலியை போலவேதான், மற்றவர்கள் நம்மால் தாக்கப்பட்டால் அனுபவிக்கிறார்கள் என்று புரிந்து கொண்டு தனிமையில் ஆராய்ந்து அலசி பார்த்தால், நம்முடைய கோபம் மெதுவாக குறைய ஆரம்பிக்கும்.



## பேசுவதற்கு முன் யோசிக்கவேண்டும்

மிகுந்த கோபத்துடன் இருக்கும்பொழுது, பின்னால் வருந்தும்படி ஏதாவது கூறுவது எளிது. எதுவும் கூறுவதற்கு முன், எண்ணங்களை சேகரிக்க சில கணங்கள் எடுத்துக்கொள்ள வேண்டும் - சம்பந்தப்பட்ட மற்றவர்களும் அதையே செய்ய, கால அவகாச இடங்கொடுக்க வேண்டும். மற்றவர்களை குறை அல்லது பழி கூறுவதை கூடுமானவரையில் தவிர்க்க வேண்டும். காரணம், அது பதற்றத்தை அதிகரிக்கத்தான் செய்யும்; பிரச்சனையை விவரிக்க சரியான வாக்கியங்களை உபயோகிக்கவேண்டும். உதாரணத்திற்கு, "நீ இதை செய்வதே இல்லை" என்பதற்கு பதில், "நீ இதை செய்யாதது எனக்கு வருத்தமாக உள்ளது" என்று கூற வேண்டும். கோபம் கொண்டு பேசுகிறோம் என்ற அறிவு இருந்தால், பேசும் வார்த்தைகளை கட்டுப்படுத்த முயற்சிக்கலாம். இந்த அறிவு தேவை. வார்த்தைகள் கண்ணியமாகவும் சொல்வது தெளிவாகவும் இருக்கவேண்டும். இப்படி கோபம் வந்த சமயம், நிதானமாக இருக்க பழகினால், அனாவசிய பிரச்சனைகளை தவிர்க்கலாம்.

## மன்னிப்பு

மன்னிப்பு ஒரு சக்திவாய்ந்த ஆயுதமாகும். கோபமும், எதிர்மறை உணர்வுகளும் நேர்மறை உணர்வுகளை நசுக்க அனுமதித்தால், அநீதி உணர்வால் நாம் விழுங்கப்படுவதை உணரலாம். ஆனால், நம்மை கோபப்படுத்தியவரை மனதாலும் மன்னிக்க முடிந்தால், இருவரும் அந்த நிலைமையிலிருந்து பாடம் கற்க முடியும் எல்லோரும் எல்லா நேரங்களிலும் அப்படியே நாம் எதிர்பார்க்கும்படி நடக்க வேண்டும் என்று எதிர்பார்ப்பது முற்றிலும் யதார்த்தத்திற்கு புறம்பானது.

## குழந்தைகளுக்கு ஆக்கப்பூர்வமான எண்ணங்களை அளிக்க வேண்டும்

நம் குழந்தைகளின் குறும்புத்தனமான நடவடிக்கைகள் கண்டு கோபம் கொள்ளவே கூடாது, ஆனால் அனைத்தும் விதிப்படியே என்று அமைதியான பார்வையாளராகவும் இருக்க கூடாது. பொறுமையாக அவர்களுக்கு அவர்களது மொழியிலேயே கற்பிக்க வேண்டும். அவர்கள் அமைதியாக இருக்கும் பொழுது, அவர்களுக்கு பலவித சிறுகதைகள் சொல்லி, அவர்களின் தவறை உணரச் செய்ய வேண்டும். ஒரு பொழுதும் உணர்ச்சி வசப்படவோ, கோபம் கொண்டோ, அவர்களை உரக்க கத்தியோ, தண்டித்தோ, புண்படுத்தவோ கூடாது. அவர்கள் தோற்கும் விஷயங்களில், அவர்களை புகழ கற்க வேண்டும். உதாரணத்திற்கு, புத்தகங்களை கிழிக்கும் பழக்கம் தங்கள் குழந்தைக்கு இருந்தால், நண்பர்கள் உறவினர்கள் முன் 'புத்தகங்களை கவனமாக கையாளும் நல்ல குழந்தை' என்று நிச்சயமாக புகழ வேண்டும். இப்படி செய்வதால், தங்களுக்கு உள்ள நல்ல பெயரை தக்க வைத்துக்கொண்டு, புத்தகங்களை நல்ல முறையில் கையாள, அவர்களினுள் ஒரு நல்லவித நெருக்கடியை உண்டாக்கும்.

## கோபமூட்டப்பட்டால் பதிலளிக்காமல் இருக்க வேண்டும்

ஒரு சமயம், புத்தர் ஒரு வீட்டிற்கு தருமம் யாசித்து சென்றார். வீட்டின் சொந்தக்காரர் தருமம் தர மறுத்ததோடு அல்லாமல், அவரை வசை பாடினார். புத்தர் அமைதியாக நின்று அனைத்தையும் கேட்டுக்கொண்டிருந்தார். வீட்டு சொந்தக்காரர், புத்தரின் அலட்சிய தன்மை கண்டு வியந்து, அவரிடம் எப்படி எந்த உணர்வும் வெளிப்படுத்தாமல் இருக்க முடிகிறது என்று வினவினார். புத்தர் பதிலளித்தார், "தாங்கள் எனக்கு ஒரு பசு மாடு தானம் கொடுக்க விழைந்து, நான் அதை மறுத்தால், அந்த பசு யாருக்கு சொந்தம்? அது தங்களுக்கு சொந்தம் அல்லவா? தங்களின் வசவுகள் அது போலத்தான் !"

## உணவுமுறையை கட்டுப்படுத்த வேண்டும்

உணவில் காரசாரமான பொருட்களை கணிசமாக குறைக்க வேண்டும். மிகவும் காரம், மசாலா, உப்பு, புளிப்பு கொண்ட உணவுகளை தவிர்க்க வேண்டும். எண்ணெய், புளி, மிளகாய், உப்பு அதிகமுள்ள பண்டங்களை உட்கொள்ள கூடாது. மேலும், உணவு உண்பதற்கு முன்பு, மனதார அதனை பகவான் கிருஷ்ணருக்கு அர்ப்பணம் செய்ய வேண்டும்; ஏனெனில் சாதத்தில் உள்ள தோஷம், பிரசாதத்தில் நீங்கி விடும். ஸ்ரீமத் பாகவதத்தில், பகவான் கிருஷ்ணர் அவருடைய பிரசாதம் நிர்குணமானது - அதாவது தோஷங்களற்றது என்று கூறுகிறார்.

## சாத்வீக புத்தகங்கள் படிக்க வேண்டும்

பல்வேறு ஞானிகள் மற்றும் மகான்களின் சரித்திரம் பற்றிய புத்தகங்கள் நிறைய படிக்க வேண்டும்.

## உடற்பயிற்சி செய்ய வேண்டும்

உடற்பயற்சி நம்மை சுறுசுறுப்பாக இயங்க வைப்பதால், மனதையும் சரியாக இயங்க உதவுகிறது. உடற்பயிற்சி மன அழுத்தத்தை குறைக்க உதவுவதால் கோபத்தையும் குறைக்க உதவும். கோபம் அதிகரிப்பதை உணர்ந்தால், சுறுசுறுப்பான நடை அல்லது ஓட்டத்திற்கு சென்று, அல்லது சிறிது நேரம் சுவாரஸ்யமான விளையாட்டுகளை பயின்றவாறு செலவிட வேண்டும். எளிய ப்ராணாயாமம் (சுவாச பயிற்சி) பயில்வது மனதை கட்டுப்படுத்த ஒரு நல்ல வழியாகும். ஆயினும், இதை தகுந்த தேர்ச்சி பெற்றவர் மூலம் மிகவும் கவனமாக செய்ய வேண்டும்.

**இதை செய்வதற்கான எளிய முறை பகவானின் கருணையை பெறுவது. மஹா மந்திரத்தை மிகுந்த நம்பிக்கையும் பக்தியுடனும் கூற வேண்டும். கூறும்பொழுது பகவானிடம் நமக்கு உதவுமாறு மனப்பூர்வமாக ப்ரார்த்தனை செய்ய வேண்டும்.**

# சைதன்ய மஹாப்ரபு - 1
## அவதாரத்தின் அவசியம்



பூரி ஜகன்னாத கோவில் வேதத்தில் கூறப்பட்டுள்ள புனித தலங்களில் ஒன்று ஆகும். இந்த கோவிலின் மூர்த்திகள் ஜகன்னாதஸ்வாமி, பலராமர் மற்றும் சுபத்ரா தேவி ஆவார்கள்.

ரத யாத்ரை என்று ஜகன்னாதருக்கு பூரியில் நடக்கும் விழாவானது ஸ்ரீ கிருஷ்ணாவதாரத்தில் நடந்த ஒரு சம்பவத்தை நினைவூட்டுகிறது.





ஒரு சமயம், த்வாரகையில் ஸ்ரீ கிருஷ்ணர் ராஜ்ய பரிபாலனம் செய்து கொண்டிருக்கும்பொழுது. அவர் பலராமருடனும் சுபத்ராவுடனும் தனது அத்தை ஸ்ருத தேவியை சந்திக்க பூரிக்கு சென்றார்.

அவர் பூரியில் தங்கியிருந்தபோது, நாரதர் பிருந்தாவனம் சென்ற பிறகு ஸ்ரீ கிருஷ்ணரை சந்திக்க பூரிக்கு வந்திருந்தார்.






நாரதர், பக்தியின் உருவான ராதாராணி எப்பொழுதும் ஸ்ரீ கிருஷ்ணரை பற்றியே சிந்தித்திருப்பதையும், உலக சுகங்களில் சிறிதும் பற்றில்லாதிருப்பதையும் கிருஷ்ணரிடம் கூறினார்..

அப்படிப்பட்ட ராதா ராணி ஆனந்தத்தில் பக்தி செய்ததை தானும் அனுபவிக்க பகவான் சங்கல்பம் செய்தது தான் சைதன்ய மஹாப்ரபு என்ற அவதாரத்தின் காரணம் ஆகும்.




*ஓவியர்: பாலமுரளி*

ஜனனி வாசுதேவன்



# லேபாக்ஷி


ஆந்திர மாநிலத்தில், அனந்தபூர் மாவட்டத்தில், லேபாக்ஷி என்றொரு சிறிய வரலாற்று மிக்க கிராமத்தில், பல கட்டிட கலை சார்ந்த அற்புதங்கள் உள்ளன. லேபாக்ஷி கல்லினால் ஆன ஒரு உபதேசமாகும், சிற்ப அதிசியங்களின் களஞ்சியம். கோயிலை முன்னின்று கட்டிய வீரண்ணா, விருபண்ணா சகோதரர்களில் ஒருவர் அரசாங்க கஜானாவை செலவிட்டதினால், ராஜா கோபம் கொண்டு கண்ணை பிடுங்க தண்டனை தர இருந்தான்; அதை அறிந்த விரூபண்ணா தாமே அந்த தண்டனையை நிறைவேற்றி கொண்டார் என்றும் அதன் காரணமாகவே இது லேப-அக்ஷி — (anointed eye) என்று பரவலான ஒரு வழக்கு செய்தி.

ப்ரதான கோவில், வீரபத்ரனிற்கு அர்ப்பணிக்கப்பட்டுள்ளது, மற்றொரு தெய்வம் பாபனேஸ்வரர் (சிவ பகவான்). மூன்றாவது ஸ்ரீ ரகுநாதர் (பகவான் விஷ்ணு) ஆவார்.


அர்த்த மண்டபம் (பிரார்த்தனை கூடம்) மற்றும் நாட்டிய மண்டபம் கூடுதல் வசீகரம் அளிக்கின்றன. நாட்டிய மண்டபத்தில், மிகுந்த கவனத்துடன், இசை மற்றும் பல்வேறு நாட்டிய தோரணைகளை உள்ளபடி வடிவளாக உருவமைத்து தத்ரூபமாக சித்தரிக்கும், மிக அழகாக செதுக்கப்பட்ட கல் தூண்கள் உள்ளன.

அழகும் கலைத்திறனும் கொண்ட இந்த கோவிலில் ஒரு அதிசயம் என்னவென்றால், 70 கல் தூண்களில் ஒரு பெரிய (ஒற்றை கல்லினால் ஆன) தூண், வீரபத்ர கோவிலின் கூரையிலிருந்து தொங்கிக்கொண்டு, தரையை தொடாமல் இருப்பது. இந்த தூண் எந்த ஒரு தாங்குதலின்றி தொங்கவோ மிதக்கவோ செய்கிறது. ஆங்கிலேயர் ஆட்சியின் பொழுது, ஒரு ஆங்கிலேய பொறியாளர் இந்த கோவிலின் தொங்கும் தூணின் பின்னால் இருக்கக்கூடிய நுட்பத்தை அறிய விழைந்தார். தூணை இடம்பெயர முயற்சித்தபோது, அவருக்கு திகைப்பூட்டும் வண்ணம், சமநிலையை பராமரிக்கும் விதமாக, அது அருகிலுள்ள தூண்களில் அசைவு ஏற்படுத்தியதை அறிந்தார். கோவில், பூகம்ப பகுதியில் இல்லை என்றாலும் (பாதுகாப்பு பகுதி, மற்றும் புவியியல் ரீதியாக ஸ்திரம்), எந்த ஒரு நிலநடுக்கம் சார்ந்த நிகழ்வையும் தாங்கி நிற்கும் என நம்பப்படுகிறது.


மஹாரண்யம் ஸ்ரீ ஸ்ரீ முரளீதர ஸ்வாமிஜி அவர்கள் பகவத் கீதையில் பக்தி யோகம் பற்றி பேசியதை ஸ்ரீ M.K.ராமானுஜம் அவர்கள் தொகுத்து ஒரு புத்தக வடிவில் கொண்டு வந்துள்ளார். விலை ரூ 80/-




Bhagavata Dharma – The Path for All, Audio CD based on H.H. Maharanyam Sri Sri Muralidhara Swamiji's KALIYAYUM BALI KOLLUM, Live recording at Melbourne, Australia - 6 part lecture in English by Sri Bhagyanathanji, Organized by Global Organisation for Divinity Australia, Released by : Chaitanya Mahaprabhu NamaBhiksha Kendra. Price Rs 80/-



# புராநவா

‘புராந’ என்றால் பழமைவாய்ந்தது என்று அர்த்தம்; ‘நவா’ என்றால் நவீனம் என்று அர்த்தம். இந்த நவீன காலத்திலும் நம் மஹரிஷிகளால் நிர்ணயம் செய்யப்பட்ட அறிவியல், கணிதம், ஜோதிடம், வானியல், இசை, கட்டிடக்கலை, சிற்பக்கலை போன்ற அனைத்து துறைகளிலும் உள்ள பொக்கிஷமான விஷயங்களை அனைவரும் படித்து தெரிந்துக்கொள்வதற்காக அமைக்கப்பட்ட போட்டிதான் புராநவா. நம் புராணங்களும்கூட நம் அன்றாட வாழ்க்கைக்கான பல்வேறு நல்ல விஷயங்களையும், பாரம்பரியங்களையும் கூறுகின்றன. பழமையும் புதுமையும் சேர்ந்த இப்போட்டிக்கு புராநவா என ஸ்ரீ ஸ்ரீ ஸ்வாமிஜி அவர்களால் அழகான பெயர் சூட்டப்பட்டது. இந்தியாவின் பல்வேறு பகுதிகளில் நடைபெற்று வரும் இந்த போட்டியில் ஆண்டுதோறும் நூற்றுக்கணக்கான பள்ளி மாணவ மாணவிகள் கலந்துகொள்கின்றனர். இந்த பகுதியில் நாம் ஒவ்வொரு மாதமும் புராநவா என்ற தலைப்பில் கேள்விகள், புதிர்கள் மற்றும் குறுக்கெழுத்து வினாடி வினாக்களையும் பார்ப்போம்.


---

இங்கு காணப்படும் படங்களுக்குள் ஒரு சம்பந்தம் உண்டு. அதை கண்டுபிடிக்கவும்.



(விடை அடுத்த இதழில்)

# CROSSWORD - 1



**ACROSS**

1.Pink City (6)

2.Great Mathematician (9)

3.Pandit Ravi Shankar (5)

4.Ravana's Kingdom (5)

5.Game invented in India (5)

6.Doha Saint (5)

7.Brahadeeshwara Temple is found here (9)

8.First human on earth after the deluge (4)

9.Composer of *Saare Jahaan Se Accha* (5)

10.First Sanskrit Film in India (3,7)

11.Bhagavatha Mela is an art form of this state (9)

12.Language spoken in parts of SouthWest Karnataka (4)

13.Dakshineshwar Temple is found in this state (4,6)

**DOWN**

1.Bihu is an art form here (5)

2.Dasagreeva (6)

3.Cloth painting famous in Orissa (12)

4. Saint of the Bhakti Era, known for kirtans on Giridhari (5)

5.Father of Yoga Shastra (9)

6.______ Sharma; Panchatantra (6)

7.Kumbh Mela is celebrated once in _________ years (6)

8.Mohiniyattam is a dance form of (6)

9.R K Narayan's book (7,4)

10.Indra's Elephant (8)

11.Land of Sun Temple (9)

12.Rasas in Classical Dance (4)

13.Display of dolls, deities and kolams (4)

(Solution in subsequent issue)

# படித்ததில் பிடித்தது

**செய்தித்தாள்களிலும் பத்திரிக்கைகளிலும் வந்த சுவாரஸ்யமான செய்திகளின் தொகுப்பு**

**தொகுப்பு: ஸ்ரீ பாலக்ருஷ்ணன்**

## Harappa-like structure, 3,000 ancient artefacts found in Tamil Nadu

Deccan Chronicle
May 30, 2016

**தமிழ் நாட்டில் ஹரப்பாவில் உள்ளது போன்ற அமைப்பு, 3,000 புராதன தொல்பொருள்கள் கண்டுபிடிப்பு:**

இந்தியாவின் தொல்பொருள்சார்ந்த கணக்கெடுப்பு அமைப்பின் (ASI) நிபுணர்களின் குழு நடத்திய தோண்டுதலின் பொழுது, தமிழ் நாட்டின் கீழடி பள்ளை சந்தைபுதூர் கிராமத்தில், சுமார் 3,000 புராதன தொல்பொருள்களின் மத்தியில், அலங்கார வடிவமைப்பு கொண்ட களிமண்ணினால் ஆன ஒரு முத்திரை கண்டு பிடிக்கப்பட்டது. ASI அதிகாரிகளின் படி, உலகெங்கும் சென்ற வணிகர்கள் பயணித்த நெடுஞ்சாலையில் அமைந்திருந்த அந்த கிராமத்தில் இருந்த புராதன குடியேற்றம், ஹரப்பாவின் அமைப்புமுறைக்கு சமமான நிலத்தடி வடிகால் அமைப்புத்திட்டம் கொண்டிருந்தது. கழிவுநீர் வடிகால்கள் சுட்ட களிமண் குழாய்களால் கிடத்தப்பட்டிருந்தன. வடிகால் அமைப்புத்திட்டம் ஹரப்பா சமூக தளத்தில் காணப்பட்டதை போன்று உள்ளது. அந்த குடியேற்றம் 2,500 ஆண்டுகளுக்கு மேற்பட்டது என்றும், புராதன பாண்டிய ஆட்சிக்காலத்தை சேர்ந்தது என்றும் கூறப்படுகிறது. முத்திரைகளை தவிர, அம்புகள், இரும்பு மற்றும் செப்பு ஆயுதங்கள், அபூர்வ ஆபரணங்கள் , மற்றும் கிறுக்கும் ஆணி கண்டெடுக்கப்பட்டுள்ளன. கட்டுமானங்கள் பழுதுபடாத நிலையில் காண்பது மிகவும் அரியது. இந்த கண்டுபிடிப்புகள் சங்ககால தமிழ் நாகரீகத்தின் மேல் கூடுதல் வெளிச்சம் வீசின. நகர்ப்புற நாகரீகத்தின் அடையாளங்கள் கீழடி கிராமத்தில் கூடுதலாக இருந்தன. உண்மையில் , காவேரி பூம்பட்டினத்தை விட மிக அதிகமாகவே இருந்தது. முத்திரைகள், தங்கள் பொருட்களை முத்திரையுடன் அனுப்பிய வணிகர்களால் உபயோகப்படுத்தப்பட்டிருக்கலாம்.

# இந்திய சுதந்திர தினமும், சிதம்பரம் நடராஜர் கோவிலும்

**நன்றி:** chidambaramonline.com, Vikatan group

August 16, 2016



ஒவ்வொரு ஆகஸ்ட் 15 ஆம் தேதி சிதம்பரம் நடராஜர் கோவிலில், தேசிய கொடி ஏற்றி, சுதந்திர தினம் கொண்டாடப்படுகிறது. அன்றைய தினம் அதிகாலையில் நமது தேசியக் கொடியை வெள்ளித்தட்டில் வைத்து நடராஜர் முன்பாக பூஜை செய்கிறார்கள். பிறகு அந்தக் கொடியை மேளதாளத்துடன் எடுத்து வந்து கோயிலின் கிழக்கு கோபுரத்தில் ஏற்றி மரியாதை செய்கிறார்கள். இது எந்தவொரு வழிபாட்டு தலத்திலும் இல்லாத சிறப்பாகும். ஏற்கனவே பல்வேறு சிறப்புகளுக்கு பெயர் போன சிதம்பரம் நடராஜா கோவிலிற்கு மேலுமோர் சிறப்பு.

சர்வமத சமரசத்தை போற்றும் விதமாகவும், துறவு, வீரம், சமாதானம், எளிமை, தூய்மை ஆகிய குணங்களை கொண்டாடும் விதமாகவும் மூவர்ணத்தில் அமைந்துள்ள நம் நாட்டு கொடி அமைந்துள்ளதையும் அதிலுள்ள தர்ம சக்கரத்தையும் கண்டு வியக்காதவர் இல்லை. மேலும் நமது கொடியில் உள்ள வெள்ளை தவிர பிற காவியும் பச்சையும் விசேஷ நிறத்தவை. இப்படி ஓர் வண்ண கவி மற்றும் பச்சை நிறம் பிற நாட்டு கொடிகளில் இல்லை என்பர்.

நாடு சுதந்திரம் அடைந்தபொழுது பல மஹான்களின் ஆசிரமங்களில் அந்த தினம் மிக சிறப்பாக கொண்டாடப்பட்டது என்பர். நமது மஹான்களில் பலர் தேசத்திற்காக பல தியாகங்களை செய்தவர்கள். தேசியத்தையும் தெய்வீகத்தையும் இணைத்து பார்த்தவர்கள். இனி சிதம்பரம் என்றால் சுதந்திரதினமும் நினைவிற்கு வருமே!

- Publisher : S. Srinivasan on behalf of Guruji Sri Muralidhara Swamigal Mission
- Copyright of articles published in Madhuramurali is reserved. No part of this magazine may be reproduced, reprinted or utilised in any form without permission in writing from the publisher of Madhuramurali.
- Views expressed in articles are those of the respective Authors and do not reflect the views of the Magazine.
- Advertisements in Madhuramurali are invited.

மதுரமுரளி

| சத்சங்க நிகழ்ச்சிகள் | |
|---|---|
| 13 செப்டம்பர் 2016 | ஏகாதசி |
| 27 செப்டம்பர் 2016 | ஏகாதசி |
| 1-10 அக்டோபர் | ஸ்ரீ ஸ்வாமிஜியின் உபன்யாசம், ஸ்ரீ புவனேஸ்வரி அம்மன் கோவில், கேகே நகர்,சென்னை |

## அறிவிப்பு

அனைத்து வாசகர்களும், தங்களது தொலைபேசி எண்ணை, தங்களது சந்தா எண்ணுடன் தெரிவிக்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.

Email:helpdesk@madhuramurali.org

Ph: "24895875" SMS '9790707830'

## ஸ்ரீ ஸ்வாமிஜி அவர்களுக்கு தெரிவிக்க வேண்டிய விஷயங்களை அனுப்பவேண்டிய முகவரி

Dr.A.BHAGYANATHAN, Personal Secretary to
HIS HOLINESS SRI SRI MURALIDHARA SWAMIJI
Plot No11, Door No 4/11, Netaji Nagar Main Road,
Jafferkhanpet, Chennai - 83.
Tel. : +9144-2489 5875, Email : contact@namadwaar.org


ஜன்மாஷ்டமி, ப்ரேமிக பவனம், ஆகஸ்ட் 26, 2016


சுதந்திர தின விழா, ப்ரேமிக பவனம், ஆகஸ்ட் 15, 2016

Registered with The Registrar of Newspapers for India
R.No 62828/95
Regd. No. TN/CC(S)DN/119/15-17

Date of Publication: 1st of every month
Date of Posting: 5th and 6th of every month
Licensed to post without prepayment
WPP No. TN/PMG(CCR)WPP–608/15-17



Published by S.Srinivasan on behalf of Guruji Sri Muralidhara Swamigal Mission, New No2, Old No 24, Netaji Nagar, Jafferkhanpet, Chennai – 83 and Printed by Mr R. Kumaravel of Raj Thilak Printers (P) Ltd, 1/545A. Sivakasi Co-op Society Industrial Estate, Sivakasi. Editor: S.Sridhar